

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

பத்தி வைராக்கிய விசித்திரம்

(2) அறிவுறுத்தல்

(தரவு கொச்சகக் கலிப்பா)



# திருச்சிற்றம்பலம்



நாடகத்தால் உன்அடியார் போல்
நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்புஉனக்கு என்
ஊடகத்தே நின்றுஉருகத் 11
தந்தருள் எம்உடையானே.





யான்ஏதும் பிறப்புஅஞ்சேன்
இறப்பதனுக்கு என்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்தும்இரேன்
தேன்ஏயும் மலர்க்கொன்றைச் சிவனே
எம்பெருமான்எம்
மானே உன்அருள் பெறுநாள்
என்றுஎன்றே வருந்துவனே.

12

.





வருந்துவன்நின் மலர்ப்பாதம்
அவைகாண்பான் நாய்அடியேன்
இருந்துநல மலர்புனையேன்ஈகேம்
ஏத்தேன் நாத்தழும்பு ஏறப்
பொருந்திய பொற்சிலை குனித்தாய்
அருளமுதம் புரியாயேல்
வருந்துவன்நல் தமியேன்மற்று
என்னேநான் ஆமாறே. 13





ஆமாறுஉன் திருவடிக்கே அகம்

குழையேன் அன்புஉருகேன்

பூமாலை புனைந்து ஏத்தேன்

புகழ்ந்துஉரையேன் புத்தேளிர்

கோமான்நின் திருக்கோயில்தூகேன்

மெழுகேன் கூத்தாடேன்

சாமாறே விரைகின்றேன்

சதுராலே சார்வானே.

14





வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்று
அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை
என்சொல்லி வாழ்த்துவனே. 15





வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து
தம்மைஎல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகரம் முரலும்
தாரோயை நாய் அடியேன்
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான்
யானும் உன்னைப் பரவுவனே. 16





பரவுவார் இமையோர்கள்
பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள்
கூறுடையாள் ஒருபாகம்
விரவுவார் மெய்யன்பின்
அடியார்கள் மேன்மேல்உன்
அரவுவார் கழல்இணைகள்
காண்பாரோ அரியானே. 17





அரியானே யாவர்க்கும்
அம்பரவா அம்பலத்துஎம்
பெரியானே சிறியேனை
ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரைஆர்ந்த மலர்தூவேன்
வியந்துஅலறேன் நயந்துஉருகேன்
தரியேன்நான் ஆமாறுஎன்
சாவேன்நான் சாவேனே. 18





வேனில்வேள் மலர்க்கணைக்கும்
வெண்நகைச் செவ்வாய்க்கரிய
பானல்ஆர் கண்ணியர்க்கும்
பதைத்துஉருகும் பாழ்நெஞ்சே
ஊன்எலாம் நின்றுஉருகப்
புகுந்துஆண்டான் இன்றுபோய்
வான்உளான் காணாய்நீ
மாளா வாழ்கின்றாயே.





வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல்
காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுஉனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக்
கடலாய வெள்ளத்தே.

20



ஸ்ரீ மாணிக்கவாசகர்